**கஹவத்த பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 16 திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கஹவத்த பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 161,251 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான வைப்பு வட்டி ரூபா 172,241 மீளாய்வாண்டின் வட்டியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய நிர்வாக செலவு ரூபா 151,214 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | ரூபா 1,778,927 ஆன 02 கணக்கு விடயங்களிற்கான விரிவான அட்வணைகள் மற்றும் மீதி உறுதிப்பாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் சமர்ப்பிக்கவேண்டும். | உறுதியான சான்றுகள் எதுவும் சபையிடம் இல்லை என அறிவிக்கிறேன். |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 09 வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | தொடர்புடைய வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டம். | 2020 ஆண்டினுள் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2017 ஜுலை 25 ஆம் திகதி 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண வேண்டும். | குறிப்பிடப்படும் குறைபாடுகளை எதிர்காலத்தில் சரி செய்ய தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |
| **(இ)** | **சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை** | | | |
| (i) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதி 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமை சுற்றறிக்கையின் 2 (i) பந்தி | பதிவுரிமையை சபையினால் பயன்படுத்தப்படும் 08 வாகனங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வாகனங்களை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 (அ) பந்தி | சபைக்கு சொந்தமான ஒதுக்கப்பட்ட 02 வாகனங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கைகளை தயார் செய்து கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2018 ஜுலை 19 திகதி இலக்கம் 2018/இ-உள்ளூராட்சி 01 கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு செயற்திறனாக சேவையை வழங்க வேண்டும். | குறித்த வசதிகளை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,222,608 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,077,670 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 4,139,152 | 4,267,074 | 4,444,728 | 1,363,703 | 3,370,450 | 3,556,133 | 3,431,231 | 1,625,484 |
| (ii) | வாடகை | 8,170,277 | 6,564,472 | 6,596,722 | 781,919 | 8,186,805 | 6,231,484 | 6,124,980 | 794,419 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 945,500 | 571,912 | 517,132 | - | 932,450 | 1,154,617 | 1,148,867 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 11,836,844 | 10,711,645 | 25,824,180 | 9,000,000 | 9,766,550 | 8,537,062 | 11,805,659 | 11,318,903 |
| | | 25,091,773 | 22,115,103 | 37,382,762 | 11,145,622 | 22,256,255 | 19,479,296 | 22,510,737 | 13,738,806 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 1348 வீத வரி அலகுகள் தொடர்பாக ரூபா 1,135,759 ஆன நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், அதில் 05 ஆண்டுகளை விஞ்சிய | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட | 2019 செப்டம்பர் மாதம் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், 2020 வருடம் குறித்த ஆதனத்தை தடை செய்ய |

| | | |
|---|---|---|
| காலமாக 96 அலகுகளிற்குரிய நிலுவையான ரூபா 303,567 காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

**2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்**

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய 74 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளாததால் ரூபா 296,000 வருமானமொன்றை சபை இழந்திருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய அனைத்து நிறுவனங்களிற்கும் உரிய செயன்முறைக்கு இணங்க அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், தற்போது அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத கைத்தொழில்களை இனங்கண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

**2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 முதல் அரையாண்டிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 2,440,810 ஆனது. இறுதி அரையாண்டிற்காக அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2020 பெப்ரவரி வரையும் இனங்கண்டு இருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அட்டவணைகள் கிடைத்த பின்னர் குறித்த இனங்காணலை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **ஒதுக்கீட்டினது குறைபயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூலதன செலவுகளிற்காக ரூபா 102,615,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவு ரூபா 39,578,129 மாத்திரமே ஆனது. | பாதீட்டிலான மூலதன ஒதுக்கீடுகளிற்கு பணம் சேர்த்துக் கொள்ள சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்பார்த்த பிரகாரம் மூலதன உதவிகள் கிடைக்காததன் காரணமாக ஒதுக்கப்பட்டுள்ள மூலதன ஏறபாடுகளை பயன்படுத்த முடியவில்லை என அறிவிக்கிறேன். |

(ஆ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான திண்மக் கழிவு முகாமைத்துவ வேலை திட்டமொன்றை செயற்படுத்தி இருக்காததுடன், தற்போது கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்படும் காணியை சபைக்கு சுவீகரித்துக் கொள்ள இயலாமலிருந்தது. | திண்மக் கழிவு முகாமை நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைபடுத்த வேண்டும். | காணியை சுவீதரித்துக் கொள்ள தேவையான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதற்கான பதில் கிடைத்தவுடன் முன்நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அறிவிக்கிறேன். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் காணப்படும் அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அவற்றை அகற்ற அல்லது சட்டபூர்வமாக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மானங்களை இனங்காணல், அவற்றை அகற்றுதல் அல்லது சட்டபூர்வமாக்க வேலை ஒழுங்கொன்றை செயற்படுத்த வேண்டும். | தற்போது எந்தான பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ள 04 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றியுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத் தொகை ரூபா 98,594,794 ஆன நடைமுறையல்லாத சொத்துக்களிற்குரிய சொத்துப் பதிவேடுகள் நாளாது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துப் பதிவேடுகள் நாலாது வரையாக பேணப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான நடைமுறையல்லாத சொத்துக்களிற்கான பதிவேட்டை நாளாது வரையாக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

**3.3.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 ஆண்டு விபத்திற்கு உள்ளாகி பழுதுபார்ப்பதற்காக ரூபா 73,175 முற்பணம் செலுத்தி 2017 ஆண்டு வேலைத் தளமொன்றிற்கு ஒப்படைத்திருந்த டெக்டர் வண்டியை மீளாய்வாண்டு இறுதி வரை திருத்தியிருக்கவில்லை. | வாகன பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய டெக்டர் வண்டியை கூடிய விரைவில் திருத்தித் தருவதாக வேலைத் தளத்திலிருந்து அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | திருத்த நிலையில் காணப்படும் 03 ஆண்டுகளாக செலுத்தப்படாத டெக்டர் ஒன்று மீளாய்வாண்டு இறுதி வரையும் திருத்தப்பட்டு இருக்கவில்லை. | வாகன பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

**3.3.3 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுகளை வெளியேற்ற இடமொன்று இல்லாத காரணத்தால் சபைக்கு சொந்தமான கழிவகற்றும் பவுசர் 2014 நவம்பர் முதல் சபை வளவில் வளைவற்றதாக காணப்பட்டது. | குறித்த சேவையை வழங்கும் வேறு உள்ளூராட்சி நிறுவனமொன்றிற்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவகற்றும் பவுசரின் டெக்டர் வண்டியை கழிவுகளை ஒன்றுதிரட்ட டேலர் ஒன்றுடன் ஈடுபடுத்துவதாக அறிவிக்கிறேன். |

**3.4 பெறுகைகள்**

**பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத போது ரூபா 2,476,558 பெறுமதியான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்துள்ளதாக அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத அவதானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதவரி அறவிட சபை அதிகார எல்லையிலுள்ள அனைத்து அசையா சொத்துக்களும் 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிடப்பட வேண்டிய போதும், 2009 ஆண்டின் பின்னர் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2021 ஆண்டிற்காக வீதவரி மீள்திருத்தம் தற்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |